[1984 மார்ச் 6

(ஆ) இந்திய தண்டனைச் சட்டக் கோவை இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக்கோவை, இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம் சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு 6 சட்ட முன்வடிவுகள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. பிற்பகல் $2\frac{1}{2}$ மணிவரையில் இருந்து முடித்து விடலாம் என நினைக்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : இன்று இரண்டு மசோதாக்கள் பெரியதாக இருக்கின்றன. நாளைக்கும் தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு வரவு செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம் துவங்கப்பட இருக்கிறது. திரு. அன்பில் தர்மலிங்கம் உட்பட கட்சித் தலைவர்கள் எல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்த முடிவு அது. உறுப்பினர்கள் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

[முற்பகல் 11-10]

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சட்டத்தையும் தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்)